# தொடக்கப் பள்ளி இறுதித் தேர்வு
# தமிழ் (0007)

For Examination from 2017

## 1. மதிப்பீட்டின் நோக்கங்கள்

2008-ஆம் ஆண்டு கல்வி அமைச்சின் பாடத்திட்ட வரைவு மற்றும் மேம்பாட்டுப் பிரிவினால் உருவாக்கப்பட்ட தொடக்கநிலைக்கான பாடத்திட்டத்தின் முக்கிய நோக்கம் மாணவர் அடையக்கூடிய மொழித்திறன்களாகிய கேட்டல், பேசுதல், படித்தல், எழுதுதல் ஆகியவற்றோடு பேச்சுவழியாகவும் எழுத்துவழியாகவும் அமைந்த இருவழிக் கருத்துப்பரிமாற்றத் திறன்களை வளர்த்தல் ஆகும். தொடக்கநிலைப் பள்ளிக் கல்வி இறுதியில் மேற்கண்ட நோக்கங்களை அடைவதற்குத் தேவையான திறன்களை மாணவர் பெற்றிருப்பர். இந்தத் திறன்களைச் சோதிப்பதே மதிப்பீட்டின் நோக்கங்கள் ஆகும். மதிப்பீட்டின் நோக்கங்கள் பின்வருமாறு:

### 1.1 **கேட்டல்**

- எழுத்து, பேச்சு, படம் வடிவில் அமைந்த பலவகையான பனுவல்களைக் கேட்டுத் தமது புரிந்துணர்வை வெளிப்படுத்துதல்

### 1.2 **பேசுதல்**

- தமிழில் தமது எண்ணங்களையும் கருத்துகளையும் சரளமாகவும் தெளிவாகவும் (பேச்சுத் தமிழ் அல்லது எழுத்துத் தமிழ்) எடுத்துரைத்தல்

### 1.3 **படித்தல்**

- பலவகையான பனுவல்களைப் பொருளுணர்ந்து சரியான உச்சரிப்புடன் வாய்விட்டுப் படித்தல்
- பலவகையான பனுவல்களைப் படித்துப் புரிந்துகொண்டு அவற்றையொட்டிய வினாக்களுக்கு விடையளித்தல்

### 1.4 **எழுதுதல்**

- கொடுக்கப்படும் கட்டுரை/கதைத் தலைப்புகளுக்கு ஏற்பத் தம்முடைய எண்ணங்களையும் கருத்துகளையும் சரியாகவும் பொருத்தமாகவும் எழுதுதல்

### 1.5 **பேச்சுவழிக் கருத்துப்பரிமாற்றம்**

- ஒளிக்காட்சியைப் பார்த்து அதில் உள்ளவற்றைப் பற்றியும் அதனோடு தொடர்புடைய தம் கருத்துகளையும் உணர்வுகளையும் சரளமாகவும் தெளிவாகவும் கருத்துப்பரிமாற்றம் செய்தல்

### 1.6 **எழுத்துவழிக் கருத்துப்பரிமாற்றம்**

- வினாக்களைப் புரிந்துகொண்டு அவற்றிற்கேற்பத் தம்முடைய எண்ணங்களையும் கருத்துகளையும் சரியாகவும் பொருத்தமாகவும் கருத்துப்பரிமாற்றம் செய்தல்

## 2. தேர்வு அமைப்புமுறை

தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வுத் தமிழ் வினாத்தாள்கள் பின்வருமாறு அமையும்.

### வினாத்தாள் 1 : கட்டுரை (40 மதிப்பெண்கள், 20%)

இவ்வினாத்தாளில் இரண்டு கட்டுரைத் தலைப்புகள் இடம்பெறும். அவற்றுள் ஒன்று கட்டுப்படுத்தப்பட்ட தலைப்பு. இத்தலைப்பு குறிப்புகளை அடிப்படையாகக் கொண்டு அமையும். மற்றொன்று படத்தொடரை அடிப்படையாகக் கொண்டு அமையும். படத்தொடர் 6 கட்டங்களில் அமையும். அவற்றில் 5 கட்டங்களில் மட்டுமே படங்கள் இடம்பெறும். 6வது கட்டத்தில் கேள்விக்குறி இருக்கும். மாணவர்கள் கட்டுரை எழுதுவதற்கு உதவியாக 8 துணைச்சொற்கள் வழங்கப்படும். இவ்விரண்டு தலைப்புகளுள் மாணவர் ஏதேனும் ஒன்றினைத் தேர்ந்தெடுத்து 100 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை/கதை எழுத வேண்டும். இந்தத் தாளுக்கான நேரம் 50 நிமிடங்கள் ஆகும். வினாத்தாளைப் படித்துக் கட்டுரைத் தலைப்பைத் தேர்ந்தெடுப்பதற்கான நேரமும் இதில் அடங்கும்.

### வினாத்தாள் 2 : மொழி (90 மதிப்பெண்கள், 45%)

இவ்வினாத்தாளில் கருத்தறிதல், மொழி மரபு(Language usage), செய்யுள்/பழமொழி ஆகியவற்றையொட்டி மொத்தம் 40 வினாக்கள் இடம்பெறும். மாணவர் அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்க வேண்டும். இவ்வினாத்தாளில் இடம்பெறும் வினாக்கள் இரண்டு புத்தகங்களில் அச்சிடப்பட்டிருக்கும். அவை புத்தகம் ‘A’, புத்தகம் ‘B’ எனப் பெயர் பெறும். ‘A’ புத்தகத்தில் 25 தெரிவுவிடை வினாக்களும் ‘B’ புத்தகத்தில் 15 தெரிவுவிடை/சுயவிடை வினாக்களும் இடம்பெறும். வினாத்தாள் 2-இல் 4 வகைக் கருத்தறிதல் பகுதிகள் இடம்பெறும். அவை முன்னுணர்வுக் கருத்தறில், தெரிவுவிடைக் கருத்தறிதல், கருத்து விளக்கப்படக் கருத்தறிதல், சுயவிடைக் கருத்தறிதல் என்பன. தெரிவுவிடைக் கருத்தறிதல் பகுதியில் சொற்பொருள் வினாவும் இடம்பெறும். இந்தத் தாளுக்குரிய நேரம் 1 மணி 40 நிமிடங்கள் ஆகும்.

### வினாத்தாள் 3 : வாய்மொழி (50 மதிப்பெண்கள், 25%)

வாய்மொழித் தேர்வில் 2 கூறுகள் இடம்பெறும். அவை வாய்விட்டு வாசித்தல், ஒளிக்காட்சியை ஒட்டிய உரையாடல் என்பன. கணினித் திரையில் இடம்பெறும் ஒரு வாசிப்புப் பகுதியை மாணவர் தேர்வாளர் முன்னிலையில் வாசித்துக் காட்டுதல் வேண்டும். உச்சரிப்பு, சொல்லழுத்தம், சரளம், ஓசை நயம் ஆகியவற்றின் அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கப்படும். அதன் பின்னர் 50-55 வினாடிகளுக்குள் அமைந்த ஓர் ஒளிக்காட்சியை ஒட்டிய உரையாடலில் மாணவர் ஈடுபட வேண்டும். கருத்துப்பரிமாற்றம் நிகழும் வண்ணம் தேர்வாளர் மாணவரிடம் சில தூண்டுதல் வினாக்களைக் கேட்டு உரையாட வேண்டும். இத்தேர்வுக்குரிய நேரம் ஏறக்குறைய 10 நிமிடங்கள் ஆகும்.

### வினாத்தாள் 3 : கேட்டல் கருத்தறிதல் (20 மதிப்பெண்கள், 10%)

கேட்டல் கருத்தறிதல் தேர்வில் 10 தெரிவுவிடை வினாக்கள் இடம்பெறும். செய்தி, உரையாடல், சிற்றுரை, கதை, அறிக்கை, விளம்பரம், அறிவிப்பு, வினாவிற்கேற்ற சரியான படத்தைத் தேர்ந்தெடுத்தல் போன்ற தலைப்புகளில் வினாக்கள் இடம்பெறும். கேட்டல் கருத்தறிதல் தேர்வு குறும்பனுவல் வினாக்களையும் எதிருரை வினாக்களையும் உள்ளடக்கியிருக்கும். ஒரே தேர்வில் இத்தலைப்புகள் அனைத்தும் இடம்பெற வேண்டும் என்கிற அவசியம் இல்லை. ஒவ்வொரு வினாவும் 3 தெரிவுகளைக் கொண்டிருக்கும். ஒலிப்பதிவு செய்யப்பட்ட பனுவல்களையும் அதனையொட்டி அமைந்த வினாக்களையும் தெரிவுகளையும் கேட்ட பின்னர், மாணவர் வினாக்களுக்கு விடையளிக்க வேண்டும். இத்தேர்வுக்குரிய நேரம் ஏறக்குறைய 30 நிமிடங்கள் ஆகும்.

## 3. தேர்வு விவர அட்டவணை

**தொடக்கப்பள்ளி இறுதித் தேர்வு**
**தமிழ்**

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 1<br>(50 நி) | **1 <u>கட்டுரை</u>**<br>(100 சொற்களுக்குக் குறையாமல்)<br>1.1 கட்டுப்படுத்தப்பட்ட தலைப்பை அடிப்படையாகக் கொண்டது<br>1.2 படத்தொடரை அடிப்படையாகக் கொண்டது (6 கட்டங்கள்; 5 கட்டங்களில் மட்டுமே படங்கள்; 8 உதவிச்சொற்கள்) | கட்டுரை | 2<br>(ஒரு வினாவிற்கு விடையளித்தல்) | (20%)<br>40 |
| **Booklet A** | | | | |
| 2<br>(1மணி 40 நி) | **2 <u>கருத்தறிதல் மற்றும் மொழி மரபும் பயன்பாடும்</u>**<br>**<u>'அ' பிரிவு</u>** | | | (45%) |
| | A1 வேற்றுமை | தெரிவுவிடை | 5 | 10/5% |
| | A2 செய்யுள் /பழமொழி | தெரிவுவிடை | 5 | 10/5% |
| | A3 அடைமொழி/எச்சம் | தெரிவுவிடை | 5 | 10/5% |
| | A4 முன்னுணர்வுக் கருத்தறிதல் | தெரிவுவிடை | 5 | 10/5% |
| | B5 தெரிவுவிடைக் கருத்தறிதல் மற்றும் சொற்பொருள் | தெரிவுவிடை | 5 | 10/5% |
| | **Booklet B** | | | |
| | **<u>'ஆ' பிரிவு</u>**<br>C6 ஒலி வேறுபாட்டுச் சொற்கள் | கோடிட்ட இடங்களை நிறைவு செய்தல் | 4 | 8/4% |
| | D7 கருத்து விளக்கப்படக் கருத்தறிதல்<br>D8 சுயவிடைக் கருத்தறிதல் | தெரிவுவிடை, சுயவிடை | 11 | 32/16% |

| தாள் (நேரம்) | பொருளடக்கம் | வினா வகை | வினாக்களின் எண்ணிக்கை | (மதிப்பளவு) மதிப்பெண் |
|---|---|---|---|---|
| 3<br>சுமார்<br>(10 நி) | **3 <u>வாய்மொழி</u>**<br>1. வாய்விட்டு வாசித்தல்<br>2. ஒளிக்காட்சியை ஒட்டிய உரையாடல் | சுயவிடை | 1<br>1 | (35%)<br>20/10%<br>30/15% |
| (30 நி) | **<u>கேட்டல் கருத்தறிதல்</u>** | தெரிவுவிடை | 10 | 20/10% |